இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 84 – ஒலி: 112 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 16 – செவ்வாய்க்கிழமை 02 டிசம்பர் 2025 – கோவை ★ ★ 10 + 32 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 112: Thiruvalluvar Year - 2056 - Karthigai 16 - Tuesday 02 December 2025 - Kovai ★★ 10+32 Pages ₹ 5.00

## ‘டிட்வா’ புயல் காரணமாக பேரழிவைச் சந்தித்துள்ள

# இலங்கைக்கு துணை நிற்க தமிழ்நாடு தயார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச. 2-**

**‘டிட்வா’ புயல் காரணமாக பேரழிவைச் சந்தித்துள்ள இலங்கைக்கு துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

‘டிட்வா’ புயலால் ஏற்பட்ட இயற்கை பேரிடரை எதிர்கொள்ள இலங்கையில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புயலால் பலியானோர் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளது. 130 பேர் மாயமாகி உள்ளனர். தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய கடலோரப் பகுதிகளில் உருவான டிட்வா புயல் கடந்த 3 நாட்கள் இலங்கையை புரட்டிப் போட்டது. நுவரெலியா உள்ளிட்ட பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி கண்டி மாவட்டத்தில் 50 பேரும், பதுல்லாவில் 35 பேரும் பலியாகினர். நாடு முழுவதும் 61 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். 29.11.2025 அன்று காலை 9 மணி நிலவரப்படி, டிட்வா புயலால் பலியானோர் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மேலும், 130 பேர் மாயமாகி இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என பேரிடர் மேலாண்மை மையம் கவலை தெரிவித்தது. இலங்கையில் 35 சதவீத பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதித்தது. இந்நிலையில், ‘டிட்வா’ புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கையிலிருந்து முழுமையாக வெளியேறியது.

**அவசர நிலை பிரகடனம்!**

இதைத் தொடர்ந்து, அந்நாட்டு அரசு நிவாரண பணிகளில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. பேரிடர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள நாடு முழுவதும் உடனடியாக அவசரநிலை பிரகடனப்படுத்துவதாக அந்நாட்டு அதிபர் அனுர குமார திசநாயக அறிவித்தார்.

நெருக்கடி நிலையைச் சமாளிக்க ராணுவ துருப்புக்கள், காவல்துறை, சுகாதாரத் துறை, உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் பாதுகாப்புப் படையை நிவாரண பணிகளுக்கு விரைவாக அனுப்புவது அவசரநிலை மூலம் எளிதாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் இருந்து முற்றிலும் விலகிய டிட்வா



புயல் தமிழகம் மற்றும் புதுச்சேரி நோக்கி நகர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்டை நாடான இலங்கை இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட நிலையில், இந்தியா உடனடியாக உதவிக்கரம் நீட்டி உள்ளது. ஆபரேஷன் சாகர் பந்து என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட நிவாரண பணிகளின் படி, ஹிண்டன் விமானப்படை தளத்தில் இருந்து சி130 மற்றும் ஐஎல்76 விமானங்கள் மூலம் 21 டன் நிவாரண பொருட்களும், 80 பேரிடர் மீட்பு படை வீரர்களும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை ஏற்றிச் சென்ற சி130 விமானம் 29.11.2025 அன்று அதிகாலை 1.30 மணி அளவில் கொழும்பு சென்றடைந்தது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!**

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

**‘டிட்வா’ புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர். இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.**

**இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, இன்று (30.11.2025) காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4) தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்துவரப்பட்டுள்ளனர்.**

**ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழு!**

**டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# புதுடெல்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. – திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு



*புதுடெல்லி, டிச.2-*

*நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரை முன்னிட்டு, ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ள அனைத்துக் கட்சிக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.*

*நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நாடாளுமன்ற கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.*

*வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.*

*அனைத்துக் கட்சிக் கூட்டத்தைத் தொடர்ந்து அன்று மாலை 4 மணிக்கு மக்களவை மற்றும் மாநிலங்களவையின் அலுவல் ஆய்வுக் குழு கூட்டங்கள் நடைபெற்றன.*

*இக்கூட்டத்தில் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.*

## S.I.R. படிவங்களை சமர்ப்பிக்க

# டிச.11- வரை கால அவகாசம் நீட்டிப்பு!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

*சென்னை, டிச. 2 -*

*அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் நடைபெற்று வருகிறது. நவம்பர் 4ம் தேதி தொடங்கிய இப்பணிகள் டிசம்பர் 4ம் தேதி நிறைவடையும் என்றும் டிசம்பர் 9ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.*

*இந்த பணியின் போது பல மாநிலங்களில் பணிச் சுமை உள்ளிட்ட காரணங்களால் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் பலர் தற்கொலை செய்து கொண்டது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. எஸ்.ஐ.ஆர். படிவத்தில் கேட்கப்படும் விவரங்களை சேகரிக்க முடியாமல் ஏராளமான வாக்காளர்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டது.*

*இதற்கிடையே, 2002 / 2005 வாக்காளர் பட்டியலில் பெயர் அல்லது உறவினரின் பெயரை கண்டறியவில்லையெனில், பிற விவரங்களை நிரப்பி படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அண்மையில் அறிவித்திருந்தார். இந்நிலை யில், எஸ்.ஐ.ஆர். படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கான காலஅவகாசம் டிசம்பர் 11ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாகவும், வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 16 ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*அடுத்த ஆண்டு ஜனவரி 15ம் தேதி வரை வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மற்றும் முறையீடுகளை மேற்கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ள தேர்தல் ஆணையம், இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 14 ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளது.*

# மழை பாதிப்பு: அனைத்து புகார்கள் மீதும் உடனடி நடவடிக்கை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, டிச. 2 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 29.11.2025 அன்று எழிலகத்தில் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், டித்வா புயலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கட்டுப்பாட்டு அறையில் அனைத்து துறை பணியாளர்கள் கண்காணிப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களுடன் தொடர்பு கெண்டு பணியாற்றி வருவதையும், எல்.ஈ.டி திரை மூலம் டித்வா புயலின் நகர்வுகள் கண்காணிக்கப்படுவதையும், மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.**

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வங்கக்கடலில் உருவான டித்வா புயல் காரணத்தினால் நேற்றும் இன்றும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் இங்கு வந்து ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நானும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும், அரசு செயலாளர் அவர்களும் கட்டுப்பாட்டு மையத்திற்கு வந்து இந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம்.

கட்டுப்பாட்டு மையத்தில் உள்ள கால் சென்டருக்கு வருகின்ற அழைப்புகள், அழைப்புகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சமூக வலைதளங்களில் மழை தொடர்பாக தெரிவிக்கப்படுகின்ற புகார்கள், கோரிக்கைகள் குறித்தும் இங்கு ஆய்வு செய்துள்ளோம். வந்திருக்கின்ற அனைத்து புகார்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் அலுவலர்களிடம் தெரிவித்து உள்ளோம்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 29.11.2025 அன்று நள்ளிரவு எழிலகத்தில் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், டித்வா புயலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.